சார்பு நீதிமன்றம், மானாமதுரை

O.S. No. 27 / 2024

வா.சா.1 – பாண்டி **06.04.2026**

குறுக்கு விசாரணை :–

எனது சொத்தை 1ம் பிரதிவாதி ரத்தினம் அவரது சொத்து என்று கூறி வருவதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் 8 1/2 செண்டு ஆகும். தாவா சொத்தை சோனை என்பவர் எனக்கு கொடுத்தார். மேற்படி சோனையின் அப்பா பெயர் சின்னன்னன் சேர்வை. சோனை எனக்கு தாவா சொத்தை கொடுத்ததாக எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். சோனை என்பவர் எனக்கு தாவா சொத்தை கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக சொத்தை எனக்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சின்னன்னன் சேர்வை மற்றும் ராமு சேர்வை அண்ணன், தம்பிகள் என்றால் இல்லை. ராமுசேர்வை என்பவரை எனக்கு தெரியும், ராமுசேர்வையின் மகன் தான் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் முத்திருளாண்டி என்றால் சரிதான். சின்னன்னன் சேர்வையின் தம்பி தான் பால்ச்சாமி என்றால் சின்னன்னன்சேர்வைக்கு தம்பி கிடையாது. சின்னன்னன் சேர்வையின் மகன்கள் தான் பால்ச்சாமி மற்றும் சோனை ஆவார்கள். எனது பூர்வீக ஊர் அன்னவாசல் புதூர் ஆகும். நான் கோனார் சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சேர்வை சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பால்ச்சாமிக்கு குழந்தைகள் இல்லை என்றால் இருக்கிறார்கள் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் கமுதி அருகில் தட்டராங்குளத்தில் வசித்து வருகிறார்கள்.

பால்ச்சாமியின் உடன் பிறந்த அண்ணன் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. பால்ச்சாமியின் பங்காளி தான் 1ம் பிரதிவாதி ஆவார். பால்ச்சாமியின் சொத்துக்களை 1ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சில சொத்துக்களை அனுபவம் செய்துவருகிறார். தாவா சொத்திலிருந்து 100 அடி தூரத்திற்குள் எனது வீடு உள்ளது. எனது வீட்டின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் அருகில் 1ம் பிரதிவாதியின் வீடு தான் உள்ளது என்றால் சரியல்ல. பிராது நான்குமாலில் எனது வீட்டை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி தான் படப்பு வைத்து மாட்டுக்கொட்டகை வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் என்னுடைய படப்பு தான் தாவா சொத்தில் உள்ளது. 1ம் பிரதிவாதி மாட்டுக்கொட்டகை போட்டுள்ளார். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கும் எனது அனுபவத்தில் இருப்பதற்கும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் எனக்கு பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றும் நான் 1ம் பிரதிவாதியை அலைக்கழிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :–

நான் இந்த வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளை நான் இந்த வழக்கில் பெயரளவு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் அருகில் கூட்டுறவு

வங்கி உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் 1 செண்ட் அளவில் மாட்டுக்கொட்டகை போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் 1 செண்ட் அளவில் படப்பு அமைத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து வருவாய் துறை ஆவணங்களின் படி சர்க்கார் மனை என உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அரசுக்கு பாத்தியமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் 1 செண்டில் மட்டும் படப்பு வைத்து அனுபவம் செய்து வரும் நிலையில் முழு விஸ்தீரணத்திற்கும் பரிகாரம் கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை